RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 359 | டிசம்பர்.29 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## "தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்றவர் விஜயகாந்த்" : முதல்வர் ஸ்டாலின் புகழஞ்சலி

சென்னை, டிச.29-

"தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்ற விஜயகாந்தின் நற்பணிகளை நினைவுகூர்கிறேன்" என்று தேமுதிக தலைவர் விஜயகாந்தின் நினைவுநாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கப் பதிவில் பகிர்ந்த ட்வீட்டில், "ஏழை மக்கள் மீது பெரும் பரிவு கொண்டு, அனைவருக்கும் உதவும் தன் உயர்ந்த உள்ளத்தால் தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்ற எனது அருமை நண்பர் தேமுதிக நிறுவனர் கேப்டன் விஜயகாந்தின் நற்பணிகளை நினைவுகூர்கிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு டிச.28 ம் தேதி தேமுதிக நிறுவனத் தலைவர் விஜயகாந்த் காலமானார். அவரது உடலுக்கு லட்சக்கணக்கானோ்ர் திரண்டு அஞ்சலி



செலுத்திய நிலையில், இறுதிச் சடங்கில் அரசு மரியாதையும் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து சென்னையில் கட்சித் தலைமையகத்தில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டு, அங்கு நாள்தே்றும் பூஜையும், அன்னதானமும் செய்யப்படுகிறது.

இந்நிலையில், விஜயகாந்தின் இரண்டாமாண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது. இதனையொட்டி, அரசியல் தலைவர்கள் அவரின் நினைவுகளை பகிர்ந்து வருகின்றனர்.

முன்னதாக இன்று காலை முதலே சென்னை கோயம்பேட்டில் அவரது நினைவிடத்துக்கு தேமுதிகவினர் ஏராளமானோர் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி, மத்திய இணையமைச்சர் எல்.முருகன், பாஜக முன்னாள் அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

## காங்கிரஸ் வெறும் கட்சியல்ல: சொல்கிறார் ராகுல்

புதுடில்லி:, டிச.29-

" காங்கிரஸ் என்பது வெறும் கட்சியல்ல. அது இந்தியாவின் ஆன்மாவாக திகழ்கிறது," என அக்கட்சி எம்பி ராகுல் கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் 140வது நிறுவன தினத்தை முன்னிட்டு ராகுல் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: காங்கிரசின் நிறுவன தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டருக்கும் வாழ்த்துகள். அந்த வரலாற்று பாரம்பரியத்துக்கும்,



இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தவர்களுக்கும், அரசியலமைப்பின் அடித்தளத்தை அமைத்து ஜனநாயகம், மதசார்பின்மை, சமூக நீதி மற்றும் சமத்துவத்தின் மதிப்புகளை வலுப்படுத்திய அந்த மாபெரும் தியாகிகளுக்கு நாங்கள் மரியாதை செலுத்துகிறோம். காங்கிரஸ் என்பது வெறும் அரசியல் கட்சியல்ல. அது இந்தியாவின் ஆன்மாவின் குரல். ஒவ்வொரு பலவீனமான, ஒவ்வொரு நலிந்த, ஒவ்வொரு கடின உழைப்புக்கும் துணை நிற்கிறது. வெறுப்பு, அநீதி மற்றும் சர்வாதிகாரத்திற்கு எதிராக உண்மை, தைரியம் மற்றும் அரசியலமைப்பின் பாதுகாப்பிற்காக இன்னும் வலுவாக போராட உறுதி பூண்டுள்ளோம். இவ்வாறு அந்த அறிக்கையில் ராகுல் கூறியுள்ளார்.

## தமிழகத்தின் கடனை திமுக இரட்டிப்பாக்கி உள்ளது; காங்., நிர்வாகி கருத்துக்கு அண்ணாமலை வரவேற்பு

சென்னை, டிச.29-

தமிழகத்தின் கடனை திமுக இரட்டிப்பாக்கி உள்ளது என தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டி உள்ளார்.

உத்தரபிரதேச மாநிலத்தை விட தமிழக கடன் நிலைமை மோசமாகியுள்ளது. கடன் தொகை அதிகரித்துள்ளது என காங்கிரஸ் தகவல் பகுப்பாய்வு குழுத் தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி கூறி இருந்தார். இதனை அண்ணாமலை வரவேற்று உள்ளார். அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது: பொய் சொல்வதில் கோபாலபுரம் குடும்பம் முனைவர் பட்டம் பெற்றுள்ளது. இண்டி கூட்டணியில் உள்ள கூட்டாளிகளில் ஒருவர் தரவுகளைப் புரிந்து கொண்டு கடன் குறித்து பகிரங்கமாகப் பேசுவது வரவேற்கத்தக்கது. வெறும் ஐந்து ஆண்டுகளில், திமுக தமிழகத்தின் கடனை இரட்டிப்பாக்கியுள்ளது, அதே நேரத்தில் பற்றாக்குறைகளை மறைப்பதற்கும், பெருகிய வளர்ச்சிக் கதைகளை முன்னிறுத்துவதற்கும் கடன்களை வசதியாகப் பயன்படுத்துகிறது. இருப்பினும், பெரிய கேள்வி என்னவென்றால், திமுகவிற்கும் காங்கிரசுக்கும் இடையே உண்மையில் என்ன நடக்கிறது? ஐக்கிய முற்போக்கு கூட்டணி சகாப்தத்தின் மோதல், சண்டை மீண்டும் உருவாவது போல் தெரிகிறது. இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

## பொங்கல் நாளில் நடக்க இருந்த பட்டயக் கணக்காளர் தேர்வு மாற்றம்

புதுடில்லி, டிச.29-

பொங்கல் நாளில் நடப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்த பட்டயக் கணக்காளர் தேர்வு மாற்றப்பட்டு உள்ளது. ஜன.19ம் தேதி தேர்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. பட்டயக் கணக்காளர்கள் இடைநிலைத் தேர்வு குரூப் 2 தேர்வின் ஐந்தாம் தாள், பொங்கல் நாளில் (ஜன.15) நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. பண்டிகை நாளில் தேர்வு நடைபெறுவதற்கு தமிழகத்தில் இருந்து கடும் எதிர்ப்புக்குரல் எழுந்தது. தேர்வை வேறு ஒரு நாளில் மாற்றி நடத்த வேண்டும் என்று கோரிக்கைகளும் எழுந்தன.இந் நிலையில், ஜன.15ம் தேதி நடப்பதாக இருந்த தேர்வு மாற்றப்பட்டு உள்ளதாக பட்டயக் கணக்காளர்கள் கழகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.இதுபற்றிய அறிவிப்பும் வெளியிடப்பட்டு உள்ளது.

அதன் படி, ஜன,15க்கு பதில் ஜன.19ம் தேதி தேர்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. மற்றைய தேர்வு தேதிகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. தேதி மாற்றப்பட்டாலும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ள தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகள் செல்லுபடியாகும். மஹாராஷ்டிரா உள்ளாட்சித் தேர்தல் காரணமாக தேர்வு தேதி மாற்றப்பட்டு உள்ளதாக தமது அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பட்டயக் கணக்காளர்கள் கழகம் குறிப்பிட்டு உள்ளது.

## பழனிசாமிக்கு அஜித் படம் பரிசளிப்பு: அதிமுக பிரச்சாரத்தில் சுவாரஸ்யம்!

சென்னை: டிச.29-

சோழிங்கநல்லூரில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு அஜித் படம் பரிசளிக்கப்பட்ட நிகழ்வு கவனம் ஈர்த்துள்ளது.

'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' பயணத்தின் 6வது கட்டப் பிரசாரத்தில் இன்று மாலை திருப்போரூர் தொகுதியில் மக்களை சந்தித்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, அடுத்ததாக சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருங்குடி, எம்ஜிஆர் பிரதான சாலை திறந்தவெளித் திடலில் பிரச்சாரம் செய்தார்.

இதில் தமிழ்நாடு மாநில பாஜக முன்னாள் தலைவர், முன்னாள் ஆளுநருமான தமிழிசை சவுந்தர்ராஜன், அதிமுக



மற்றும் பாஜக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர். கூட்டம் நடைபெற்ற பகுதிக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது பிரச்சார வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது அதிமுக தொண்டர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். பலரும் அவருக்கு மலர்க்கொத்துகளையும், பொன்னாடைகளையும் அன்பளிப்பாக வழங்கினர்.

அப்போது தொண்டர்கள் சிலர் நடிகர் அஜித் மற்றும் இபிஎஸ் இருவரும் இருக்கும் புகைப்படம் ஒன்றை ஃப்ரேம் செய்து அவருக்கு பரிசளித்தனர். அதனை இபிஎஸ் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்ளும் வீடியோ வைரலாகி வருகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு எடப்பாடி பழனிசாமியின் பிரச்சாரக் கூட்டங்களில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் கொடிகள் காணப்பட்டன. இதனையடுத்து விரைவில் அதிமுக கூட்டணியில் தவெக இடம்பெறும் என்று பலரும் கூறிவந்தனர். அதன்பிறகு அதற்கான முன்னெடுப்புகள் எதுவும் நடப்பதாக தெரியவில்லை. அதிமுகவில் இருந்த செங்கோட்டையனும் தற்போது தவெகவில் இணைந்து விட்டார். இந்த சூழலில் எடப்பாடி பழனிசாமியின் பிரச்சாரக் கூட்டத்தில் அவருக்கு அஜித் படம் பரிசாக வழங்கப்பட்ட நிகழ்வு கவனம் ஈர்த்துள்ளது.

## இளைஞர்கள் தலைமையேற்க முன் வர வேண்டும்: அதானி பேச்சு

பாரமதி, டிச.29-

''இந்தியாவின் இளைஞர்கள் அறிவாற்றல் யுகத்துக்கு தலைமையேற்க முன்வர வேண்டும்,'' என பிரபல தொழிலதிபர் கவுதம் அதானி கூறியுள்ளார். மஹாராஷ்டிரா மாநிலம் பாரமதியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் 'சரத்பவார் செயற்கை நுண்ணறிவு திறன் மையத்தை' திறந்து வைத்த தொழிலதிபர் சரத்பவார் பேசியதாவது: இந்தியாவின் வலிமை என்பது மக்கள், நிறுவனங்கள் மற்றும் நீண்டகால பார்வையை ஒன்றிணைக்கும் திறனில் உள்ளது. அதே தெளிவுடன் இப்போது இளம் இந்தியர்கள் வழிநடத்த வேண்டும். அவர்களை திறனை உருவாக்குபவர்களாகவும், அதன் நிபுணர்களாகவும் மாற்றும் வகையில் அதனை அணுகச் செய்ய வேண்டும். தொழில்துறை புரட்சிகள் முதல் இந்தியாவின்




சொந்த டிஜிட்டல் மாற்றம் வரை ஒவ்வொரு பெரிய தொழில்நுட்ப மாற்றமும் மனித ஆற்றலை விரிவுபடுத்தியுள்ளது.

சாதாரண குடிமக்களின் கைகளில் நேரடியாக நுண்ணறிவு மற்றும் உற்பத்தித்திறனை ஏஐ வழங்கும் . இதன் மூலம் அனைதது தரப்பு இளைஞர்களும் வளர்ச்சி பெறுவதற்கான வழிவகையை ஏற்படுத்தி உள்ளது.ஏஐ தலைமைத்துவத்தை வெளியாட்களுக்கு வழங்கக்கூடாது. இன்றைய உலகில் பொருளாதார சக்தியையும், தேசிய ஆதிக்கத்தையும் உளவுத்துறை மாற்றி வருகிறது. அந்த நேரத்தில் அல்காரிதம்களுக்காக வெளிநாடுகளை சார்ந்து இருப்பது அச்சத்தை ஏற்படுத்தும்.

தரவுகள், முடிவெடுக்கும் திறன் ஆகியவை தேசிய நலனில் நிலைநிறுத்தப்பட வேண்டும். உள்நாட்டு ஏஐ மாதிரிகள், வலுவான கணினி திறன் மற்றும் மீள்தன்மை கொண்ட நுண்ணறிவு சுற்றுச்சூழல் அமைப்புகளை உருவாக்குவது இந்தியாவின் பொருளாதார பாதுகாப்பு, கலாச்சார நம்பிக்கை மற்றும் சுதந்திரத்துக்கு முக்கியம். இவ்வாறு அவர் பேசினார்.

அதானி நிதியுதவியுடன் செயல்படும் இந்த செயற்கை நுண்ணறிவு மையத்தை 'வித்யா பிரதிஷ்தான்' என்ற கல்வி நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்த கல்வி நிறுவனத்தை சரத்பவார் குடும்பத்தினர் நிர்வகித்து வருகின்றனர். இன்றைய நிகழ்வில் சரத்பவார், அவரது மகள் சுப்ரியா சுலே, மஹாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த மையம் துவங்கப்பட்டுள்ள பாரமதி, சரத்பவார் போட்டியிட்டு வென்ற தொகுதியாகும். தற்போது இந்த தொகுதியில் பவார் மகள் சுப்ரியா எம்.பி.,யாக இருக்கிறார்.

## சம வேலைக்கு சம ஊதியம் கோரி 3வது நாளாக போராட்டம்: சென்னையில் இடைநிலை ஆசிரியர்கள் கைது

சென்னை, டிச.29-

சம வேலைக்கு சம ஊதியம் வழங்கக்கோரி, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்திய இடைநிலை ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டனர்.ஊதிய முரண்பாட்டை களையக் கோரி இடைநிலை ஆசிரியர்கள், சென்னை டிபிஐ வளாகத்தை நேற்று முன்தினம் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். தொடர்ந்து அவர்கள் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் 1400க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, மாலையில் அனைவரும் விடுவிக்கப்பட் டனர். அதைத்தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களை தமிழக அரசு பேச்சுவார்த்தைக்கு




அழைத்தது. அதன்படி, இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் இயக்கத்தின் மாநில தலைவர் ரெக்ஸ் ஆனந்தகுமார், பொதுச்செயலாளர் ஜே.ராபர்ட் உள்ளிட்ட நிர்வாகிகள் தலைமைச் செயலகத்தில் பள்ளிக்கல்வித்துறை செயலர் ப.சந்திரமோகன், தொடக்கக் கல்வி இயக்குநர் பி.ஏ.நரேஷ் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால், எழும்பூரில் உள்ள மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலக வளாகத்தில் அமர்ந்து 500க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், போராடிய ஆசிரியர்களை குண்டுக்கட்டாகத் தூக்கி போலீஸ் வாகனங்களில் ஏற்றி வெளியேகொண்டு சென்றனர். நேற்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கைதான நிலையில் மாலையில் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.இந்த நிலையில், சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வலியுறுத்தி சென்னையில் இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் 3வது நாளாக இன்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீஸார் கைது செய்து வாகனத்தில் ஏற்றி அருகில் உள்ள திருமண மண்டபத்துக்கு அனுப்பி வைத்தனர். கைது நடவடிக்கையை கண்டித்து ஆசிரியர்கள் சாலைமறியலில் ஈடுபட்டதால், அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது




# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தில் இரத்த தானம் முகாம்

மானாமதுரை டிச.29-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர்க் கிளையின் சார்பாக தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மானாமதுரை நகர்க் கிளையும் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இரத்த வங்கியும் இணைந்து நடத்தும் ஐந்தாம் ஆண்டு இரத்ததான முகாம் நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியானது மாவட்ட பொருளாளர் முகமது இஸ்மாயில் தலைமையிலும் மாவட்டத் துணை தலைவர் முகமது அனிபா, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஏ. எஸ்.முகமதுசிகாபுதீன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக 25 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் நாகஜோதி மணிகண்டன் கலந்து கொண்டு சான்றிதழ் மற்றும் மரக்கன்றுகளை வழங்கிச் சிறப்பித்தார்இதில் மருத்துவர் சூசைராஜ் தலைமையிலான மருத்துவ குழுவினர் இரத்தக் கொடையாளர்களிடமிருந்து தானமாக 50 யூனிட்டுகள் இரத்தத்தை தானமாக சேகரிக்கப்பட்டது.இம்முகாமை மானாமதுரை கிளை நிர்வாகிகள் அப்துல் நாசிர், முகமது ஹனிபா, அப்துல்சமத், சம்சுதீன், ஆசிக் உமர், சல்மான் பாரிஸ் - சேக் அப்துல்லா ஆகியோர் உடன் இருந்தனர்இந்த இரத்த தான நிகழ்ச்சியை நடத்தியதமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் நிர்வாகி களை அப்பகுதி பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டினர்.



# அமைச்சர் பெரியகருப்பன் பிறந்தநாள் மானாகுடியில் மாபெரும் வடமாடு மஞ்சுவிரட்டுஒன்றிய செயலாளர் டாக்டர் ஜெயராமன் தொடங்கி வைப்பு

சிவகங்கை, டிச.29-

சிவகங்கை தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர்,சிவகங்கை திமுக மாவட்டக்கழக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் பிறந்தநாளானது இம்மாதம் நாளை 30 ந்தேதி வருவதையொட்டிசிவகங்கை தெற்கு ஒன்றியம்மானாகுடி கிளைக்கழக திமுக சார்பில் இரண்டாம் ஆண்டு மாபெரும் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியினை சிவகங்கை தெற்கு ஒன்றிய செயலாளர் டாக்டர் ஜெயராமன் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.இந்த போட்டியில் சிவகங்கை, தஞ்சை, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்தும் காளைகள் கலந்து கொண்டனஇதில் அரசனி முத்துப்பட்டியை அடுத்துள்ள துக்கால் கிராம மாடுபிடி வீரர்கள் கலந்து கொண்டுவெற்றி பெற்று பரிசு பெற்றனர். மானாகுடி திமுக கிளைக்கழக செயலாளர் அய்யப்பன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வெல்டிங் செந்தில் ஆகியோர் உள்ளிட்ட கிளைக்கழக நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்த

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திமுக நிர்வாகிகளான சிங்கமுத்து, ஒமேகா திலகவதி கண்ணன் ,இராஜேஷ்வரி அண்ணாதுரைஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வண்டவாசி தங்கம் என்ற செல்வம் , துணை அமைப்பாளர் அழகுசுந்தரம் , டாமின் குமார் ,உள்ளிட்ட சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மானாகுடி கிளைக்கழக நிர்வாகிகள் அனைவரும் நிகழ்ச்சி ஏற்பாடுகளை மிகவும் சிறப்பாக செய்திருந்தனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி திருப்புவனத்தில் நேற்று புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி நடைபெற்றது இந்நிகழ்வில் தேமுதிக நிர்வாகிகள்பாலகுரு,காளீஸ்வரன் பழனி மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் கவுன்சிலர் அயோத்தி, தேமுதிக நிர்வாகிகள் ஆகியோர் கேப்டன் விஜயகாந்த் திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்..

# ஆப்பரேஷன் சிந்தூர் தாக்குதலில் விமானப்படை தளம் சேதம்: ஒப்புக்கொண்டது பாகிஸ்தான்

இந்தியா, டிச.29-

ஆப்பரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது, நூர் கான் விமானப்படை தளத்தின் மீது இந்தியா தாக்குதல் நடத்தியதில் சேதம் அடைந்ததை பாகிஸ்தான் ஒப்புக்கொண்டது.

இது குறித்து பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சரும், துணைப் பிரதமருமான இஷார் தார் கூறியதாவது: ராவல்பிண்டியில் உள்ள நூர் கான் விமான தளத்தை இந்தியா குறிவைத்து தாக்குதல் நடத்தியது. அப்போது பாதுகாப்பு பணியின் ஈடுபட்ட வீரர்களை தாக்கினர். இந்தியா பாகிஸ்தானை நோக்கி ட்ரோன்களை ஏவியது. 36 மணி நேரத்தில் 80 ஆளில்லா விமானங்கள் அனுப்பப்பட்டன.

80 ஆளில்லா விமானங்களில் 79 ஆளில்லா விமானங்களை நாங்கள் இடைமறித்து, தடுத்தோம். ஒரு ஆளில்லா விமானம் மட்டுமே ஒரு ராணுவ தளத்தை சேதப்படுத்தியது. மே 10ம் தேதி அதிகாலையில் நூர் கான் விமானப்படை தளத்தை தாக்கி இந்தியா தவறு செய்துவிட்டது. இவ்வாறு அவர் கூறினார். ஆப்பரேஷன் சிந்தூர் முடிவில் பாகிஸ்தானில் உள்ள பல விமானப்படை தளங்கள் சேதம் அடைந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாக பரவியது குறிப்பிடத்தக்கது.

# தேவகோட்டை புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி மாணவிகள் 32 வருடத்திற்கு பின்பு சந்திப்பு

சிவகங்கை டிச.29-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி தேவகோட்டை பள்ளி மாணவிகள்(19911993) 32 வருடங்களுக்கு பின்பு சந்திக்கும் நிகழ்வு மெஹர் இன் ஹோட்டலில் நடைபெற்றது. இறை வணக்கப்பாடலுடன் தொடக்க ஜெபம் ஆசிரியை அனன்சியா தொடங்க உறவின் சங்கமம் நிகழ்வானது ஆரம்பமானது. மாலதி அனைவரையும் வரவேற்றார். விழாவில் ஒருங்கிணைப்பாளர் அனிதா தலைமை ஏற்றார். ஒருங்கிணைப்பாளர் சுதா முன்னிலை வகித்தார். மலர்விழி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். வருகை புரிந்த நண்பர்கள் அனைவரும்



தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். பள்ளி பருவத்தில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்வுகளையும் நீங்காத மலரும் நினைவுகளாக ஒருவருக்கொருவர் உணர்வுபூர்வமாக தங்களின் உள்ளார்ந்த அன்பை பகிர்ந்து கொண்டனர். பள்ளிப் பருவத்தில் நடைபெற்ற சுவாரஸ்யமான நினைவுகளை ஞாபகப்படுத்தி ஒவ்வொருவரும் கூறி மகிழ்ந்தனர். ஆடல் பாடலுடன் ஒருவருக்கொருவர் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி 32 வருடங்களுக்கு முன்பு உள்ள பள்ளியின் செயல்பாடுகளை பெருமையாக பேசி தங்களின் ஆசிரியர்களின் வழிகாட்டுதல்களை நினைத்து மகிழ்ந்தனர். அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ராமன் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி முதுகலை பட்டதாரி ஆசிரியர் மைக்கேல் பொறியாளர் ஜான் வாழ்த்துரை வழங்கினர். நித்திலா பிரசன்னா மலர்விழியின் பரத நாட்டியமும் பேராட்சி செல்வியின் நடனமும் கண்கவர் விருந்தாக அமைந்தது. அருள்சகோதரி அமலி பாக்கியலட்சுமி ஜான்சி பெப்பின் சாந்தி கலைசெல்வி ஆகியோர் பாடல்கள் பாடி மகிழ்வித்தனர். மைதிலி நன்றி கூறினார். இணைய வழியில் வெளிநாட்டில் உள்ள தோழிகளுடன் கலந்துரையாடி மகிழ்ந்தனர். ரேவதி சுதா திலகவதி பிரமிளா ராணி பிளாரன்ஸ் ஜெயந்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





# 2ஆம் ஆண்டு விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் மத்திய பகுதி சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது

தாம்பரம், டிச.29-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர மத்திய பகுதி சார்பில் பகுதி செயலாளர் என்.ஆர். ஆனந்தன் தலைமையில் 2ஆம் ஆண்டு விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு படத்திற்கு மலர் தூது மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனேகை முருகேசன் அவர்களின் ஆலோசனைப்படி நடைபெற்றதுஇதில் பகுதி செயலாளர் என்.ஆர். ஆனந்தன், பகுதி அவை தலைவர் பாலாஜி பகுதி பொருளாளர் சையத் அப்துல்லா மத்திய பகுதி இளைஞரணி செயலாளர் தினேஷ் ஆகியோர் கலந்து கொண்டு கலந்து விஜயகாந்த் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் அதனை தொடர்ந்து கழக கொடி ஏற்றி வைத்து அன்னதானம் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் மத்திய பகுதி நிர்வாகிகள் சுக்கா முருகன், குணசேகரன், தேவராஜ், சூர்யதேவன், சதீஷ்குமார், வள்ளி, சக்திவேல், சரவணன், மத்தியபகுதி இளைஞரணி ரமேஷ், கோபி, ஆசைதம்பி, மணி, மத்திய பகுதி வட்டச் செயலாளர்கள் பாலாஜி, விக்ரம், பாலமுருகன், லட்சுமணன், முரளிமனோகர் மற்றும் தேமுதிக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# உஸ்மான் ஹாதியின் கொலையாளிகள் குறித்து வங்கதேசம் சொல்வது பொய்

## மேகலாயா போலீசார், பிஎஸ்எப் நிராகரிப்பு

கவஹாத்தி, டிச.29-

மாணவர் தலைவர் ஷெரீப் ஹாதியைக் கொன்றதாக சந்தேகிக்கப்படும் இரண்டு பேர் வடகிழக்கு மாநிலத்திற்கு தப்பிச் சென்றதாக வங்கதேசத்தில் ஊடகங்களில் வெளியான செய்திகளை மேகாலயா போலீசார், எல்லை பாதுகாப்பு படையினர் (பிஎஸ்எப்)நிராகரித்துள்ளனர்.

நம் அண்டை நாடான வங்கதேசத்தில், அடுத்தாண்டு பிப்., 12ல் பார்லிமென்ட் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் தேதி அறிவிப்பு வெளியானதில் இருந்தே அந்நாட்டில் தொடர்ந்து வன்முறைகள் அரங்கேறி வருகின்றன.'இன்குலாப் மஞ்ச்' என்ற மாணவர் அமைப்பின் செய்தி தொடர்பாளர் ஷெரீப் ஓஸ்மான் ஹாதி, கடந்த வாரம் நடந்த துப்பாக்கி சூட்டில் உயிர்இழந்தார். இதையடுத்து, அந்நாட்டில் பெரும் வன்முறை வெடித்தது.

ஓஸ்மான் ஹாதியை துப்பாக்கியால் சுட்டதாக சந்தேகிக்கும் இருவர் இந்தியாவுக்குள் நுழைந்தனர் என டாக்கா போலீசார் தெரிவித்திருந்தனர். இந்நிலையில் வங்கதேச குற்றச்சாட்டை இந்திய எல்லை பாதுகாப்புப்படை மற்றும் மேகாலயா போலீசார் மறுத்துள்ளனர்.'மேகாலயாவில் உள்ள ஹலுயாகாத் செக்டார் சர்வதேச எல்லை வழியாக இந்தியாவுக்குள் தனிநபர் நுழைந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை.

வங்கதேசத்தின் குற்றசாட்டு ஆதாரமற்றது. தவறாக வழிநடத்துவதாகும். எல்லைப் பாதுகாப்பு படையினர் அப்படி நுழைவது கண்டுபிடிக்கவும் இல்லை என மேகலயாவில் உள்ள பிஎஸ்எப் தலைவர் தெரிவித்துள்ளார்.

# அழகப்பா பல்கலைக்கழகத்தில் மாணவ கலைத்திறன் திருவிழா


காரைக்குடி, டிச.29-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறையின் மாணவர் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பில் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையேயான போட்டிகள் JOURNOFEST-2K25 என்ற பெயரில் (22/12/2025ல்) நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் துவக்க விழாவில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை தலைவர் முனைவர்.நீ.ஜான்சன் வரவேற்புரை வழங்கினார், பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர். செந்தில்ராஜன் துவக்கவுரை ஆற்றினார், கலைப்புலத்தின் தலைவர் முனைவர்.ராஜாராம் வாழ்த்துரை வழங்கினார், துவக்கவிழாவிற்கான



நன்றியுரையினை இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை உதவிப் பயிற்றுநர் திரு.மு.ஹரிபாஸ்கர் வழங்கினார். இதனைத் தொடர்ந்து போட்டிகள் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் குழு போட்டிகளாக குறும்படப் போட்டி மற்றும் விளம்பர அரங்கேற்றமும், தனிநபர் போட்டிகளாக புகைப்படப்போட்டி, குறுங்காணொளி தயாரித்தல், ஒரு பக்க கதை, ரேடியோ ஜாக்கி, விவாதம் மற்றும் வினாடி வினா போட்டிகளும் நடத்தப்பட்டன. நிகழ்வின் பரிசளிப்பு விழாவில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை தலைவர் முனைவர்.நீ.ஜான்சன் வரவேற்புரை வழங்கினார், அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மதிப்புறு கர்னல்.முனைவர்.க.ரவி தலைமையுரை ஏற்று மாணவர்களுக்கு வாழ்த்துக்களை வழங்கினார். நிகழ்வின் சிறப்பு விருந்தினர் காரைக்குடி குளோபல் மிஷன் மருத்துவமனையின் நிறுவனர் மருத்துவர்.குமரேசன் சிறப்புரையாற்றி, துணைவேந்தரோடு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். நிகழ்வின் இறுதியாக இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை மாணவர் கூட்டமைப்பின் தலைவர் யாசிப் அராபத் நன்றியுரை வழங்கினார்.

இப் போட்டிகளில் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் இருந்து ஏராளமான மாணவர்களும், பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்



## இந்திய ஜனநாயக கட்சியின் சார்பாக பழனியில் மறைந்த முன்னாள் தேமுதிக தலைவர் விஜயகாந்தின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் முன்னிட்டு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினர்

திண்டுக்கல், டிச.29-
திண்டுக்கல் மாவட்டம் பழனியில் இந்திய ஜனநாயக கட்சியின் சார்பாக மறைந்த தேசிய முற்போக்கு திராவிட கழக தலைவர் விஜயகாந்த் அவர்கள் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும் இருந்து நடிகர் சங்கத்தை கடனிலிருந்து மீட்டு அதற்கு தனி மரியாதையைத் தேடிக் கொடுத்தவர். செல்லமாக எல்லோரும் கேப்டன் கேப்டன் என திரைத்துறை மட்டுமல்லாமல் ரசிகர்களும் அழைக்கப்பட்ட விஜயகாந்தின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டுதிண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் அல்தாஃப் ரஹ்மான் தலைமையில் அவரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி வீரவணக்கம் செலுத்தினர் மற்றும் இந்நிகழ்வில் மாவட்ட ஐடி செயலாளர் பிரபாகரன்.கிழக்கு ஒன்றிய செயலாளர் முகமது இப்ராஹிம்.நகரத் தலைவர் கார்த்திக்.கிழக்கு ஒன்றிய ஐடி செயலாளர் முகமது அஜ்மல்.கிழக்கு ஒன்றிய துணைத் தலைவர் மணிகண்ட பூபதி. நகர ஐடி வின் செயலாளர் அஜித் குமார். பேரூர் தலைவர் விக்னேஷ். ஆகியோர் கலந்து கொண்டனர்





## தாம்பரம் அடுத்த கவுரிவாக்கத்தில் S.I.V.E.T கல்லூரி மாணவர்கள் 300 பேர் அரசு மருத்துவமனைக்காக ரத்த தானம் செய்தனர்.

தாம்பரம், டிச.29-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த கவுரிவாக்கத்தில் உள்ள S.I.V.E.T கல்லூரியில் S.I.V.E.T கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், என்எஸ்எஸ், என்சிசி, ஒய்ஆர்சி, ஆர்ஆர்சி, மற்றும் ரோட்டரி கிளப் இணைந்து மாபெரும் ரத்ததானம் முகாம் நடைப்பெற்றது. முகாமிற்கு கல்லூரி முதல்வர் ஆர்.சரவணன் தலைமை தாங்கினார். முகாமிற்கு சென்னை பல்கலைகழக நாட்டு நல திட்ட பணி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஆனந்தன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்தார். இதில் 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு ஆர்வத்துடன் ரத்ததானம் வழங்கினர். ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் ரத்ததானம் வழங்கியது மற்ற மாணவர்களிடையே ரத்ததானம் வழங்க விழிப்புணர்வுளாக அமைந்தது மாணவர்கள் வழங்கிய ரத்ததானம் அரசு மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைக்காக பயன்படுத்துவதற்காக கொண்டு செல்லப்பட்டது



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கட்டிக்குளம் கிராமத்தில் எல்லா ஜீவ ராசிகளும் வாழ வேண்டி கோவில் உள்ள கருப்பனேந்தல் மடத்தில் மகாசித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி முதல் ஒடுக்க ஜீவஸ்தலமாக உள்ளது. கடந்த சனிக்கிழமைஇங்கு மகாயாகம் நடைபெற்றது. உலக மக்கள் அமைதிக்காக இயற்கை சீற்றங்கள் ஏதும் ஏற்படக்கூடாது விவசாய வளம் செழித்து உலகில்திருப்பணிகள் சிறப்பாக நடைபெற வேண்டியும் சிறப்பு மகாயாகம் சித்தர்கள் வழியில் தமிழ் முறைப்படி தவத்திரு பனையபட்டி செழியன் சுவாமியால் நடத்தப்பட்டது.இந்த மகாயாகத்தில் புதிய யாக குண்டத்தில் 21 வகையான மூலிகைகள் மற்றும்அனைத்து வகையான பழங்கள் பூ மாலைகள் போடப் பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி பதினாறு வகையான அபி ஷேகம், தீபாராதனை நடை பெற்றது . அனைத்து மின் விளக்குகள் சார அணைக்கபட்டு இரவில் யாகத்தில் ஆள் உயர அள வில் வளர்ந்த யாகத்தில் தோன்றிய ஜோதியை ஆயி ரக்கணக்கான பக்தர்கள் தரி சனம் செய்தனர்.அதை தொடர்ந்து சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை கட்டிக் குளம் கருப்பனேந்தல் மடம் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி வழி பாட்டு குழுவினர் செய்து இருந்தனர்.

## பழனி சிவகிரி பட்டிஇலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமை அயலகத் தமிழர் நலன் மறுவாழ்வுத்துறை ஆணையாளர் மா.வள்ளலார்ஆய்வு



பழனி, டிச.29-
திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சிவகிரி பட்டி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமை அயலகத் தமிழர் நலன் மறுவாழ்வுத்துறை ஆணையாளர் மா.வள்ளலார், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.
தொடர்ந்து, அயலகத் தமிழர் நலன் மறுவாழ்வுத்துறை ஆணையாளர் மா.வள்ளலார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, இலங்கைத் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டும், அவர்களின் வாழ்வினை மேம்படுத்தும் நோக்கிலும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், இலங்கைத் தமிழர்களுக்கு புதிய குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றைய தினம் பழனி வட்டத்திற்குட்பட்ட சிவகிரி பட்டி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டு வரும் குடியிருப்பு பணிகளின் நிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும், முகாம் பகுதியில் வசிக்கும் மக்களின் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறியப்பட்டது. மேலும், முகாம் பகுதிகளில் தேவையான கூடுதல் வசதிகள் ஏற்படுத்தி தருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அயலகத் தமிழர் நலன் மறுவாழ்வுத்துறை ஆணையாளர் மா.வள்ளலார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.
தொடர்ந்து, சிவகிரி பட்டி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசித்து வரும் மக்களிடமிருந்து தெருவிளக்கு வசதி, கழிவறை வசதி, முதியோர் உதவித்தொகை, இறந்தவர்களுக்கு இழப்பீடு தொகையாக ரூபாய் 5000 வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை அயலகத் தமிழர் நலன் மறுவாழ்வுத்துறை ஆணையாளர் மா.வள்ளலார், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும், சிவகிரி பட்டி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் மக்கள் வழங்கப்பட்ட கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அலுவலர்களுக்கு அயலகத் தமிழர் நலன் மறுவாழ்வுத்துறை ஆணையாளர் மா.வள்ளலார் இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார் இந்த ஆய்வில், பழனி வருவாய் கோட்டாட்சியர் கண்ணன், பழனி வட்டாட்சியர் பிரசன்னா அவர்கள் ஆகியோர் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



## கேப்டன் விஜயகாந்த் 2ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் மேற்கு பகுதி சார்பில் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி 500பேர்க்கு அன்னதானம் வழங்கப்பட்டது

தாம்பரம், டிச.29-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மேற்கு பகுதி சார்பில் பகுதி செயலாளர் மார்க்கெட் ஞானப்பால் தலைமையில் 2ஆம் ஆண்டு விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு படத்திற்கு மலர் தூது மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனேகை முருகேசன் அவர்களின் ஆலோசனைப்படி நிகழ்ச்சி நடைபெற்றது
இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட துணை செயலாளர் மா.செழியன் கலந்து கொண்டு விஜயகாந்த் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி 500 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது அதனை தொடர்ந்து 49வது, 53வது, 54வது, 60வது வார்டில் கேப்டன் திருவருள் படத்திற்கு மரியாதை செலுத்தி அன்னதானம் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் மேற்கு பகுதி நிர்வாகிகள் மாலதி, ரகுபதி, துறைக்குட்டி, பழனிவேல், பானுமதி, திலகா, பத்மா, சுரேஷ், வட்டச் செயலாளர்கள் கிரி சுரேஷ் பாஸ்கர் ராகவன் 49வது வார்டு நிர்வாகிகள் செல்வி ரமேஷ் சுரேஷ்குமார், கவின் குமார் மற்றும் தேமுதிக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ திண்டுக்கல் குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு மற்றும் சைபர் கிரைம் போலீசார் இணைந்து அதிகாரிப்பட்டி சமுதாயகூடத்தில் செவாலியர் அகாடமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு குழந்தை திருமணம், கடத்தல்,POCSO சட்டம், சைபர் குற்றங்கள்,போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.மேலும் காவல் உதவி எண்கள் 1098,1930 குறித்து எடுத்துரைத்தனர்இந்த நிகழ்வில் புறநகர் போலீஸ் டி.எஸ்.பி.சங்கர், சாணார்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் வேலுமணி, குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு சப் இன்ஸ்பெக்டர் அருணா உஷாநந்தினி, சைபர் கிரைம் காவல் நிலைய சப் இன்ஸ்பெக்டர் ஈஸ்வரி, ஆசிரியர்கள், காவலர்கள்,பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.




## வள்ளல் தகடூர் அதியமான் பெயரை எழுதிய நெடுஞ்சாலைத்துறை

சேலம், டிச.29-
ஏற்காடு மலைப்பாதை 8வது கொண்டை ஊசி வளைவிற்கு தகடூர் அதியமான் வளைவு என்று நெடுஞ் சாலை துறை பெயரை எழுதி உள்ளது. மேலும் அங்கு போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சேலத்திலிருந்து ஏற்காடு செல்லும் மலைப்பாதையில் மொத்தம் 20 கொண்டை ஊசி வளைவுகள் (hair) உள்ளன. இந்த வளைவுகள் மிகவும் செங்குத்தானவை. ஒவ்வொரு வளைவுக்கும் பண்டைய கால மன்னர்களின் புகழைப் போற்றும் வகையில், அவர்களது பெயர்கள் வைக்கப்பட்டு உள்ளன. அந்தவகையில், 8வது கொண்டை ஊசி வளைவிற்கு தகடூர் அதியமான் வளைவு என்று பெயர் வைக்கப்பட்டு இருந்தது.

கடந்த கோடை விழாவின் போது சாலையை புதுப்பிக்கும் பொழுது எட்டாவது கொண்டை ஊசி வளைவிற்கு ஈவெரா பெயரை நெடுஞ்சாலை துறையினர் வைத்துவிட்டனர். இதற்கு நாம் தமிழர் கட்சியினர் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த வளைவில் நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்கள் ஈவெரா என்ற பெயரை அழித்து விட்டு, அதன் மீது, கருப்பு பெயின்ட் அடித்து, 'தகடூர் அதியமான்' வளைவு என, பிளக்ஸ் ஒட்டினர். போராட்டம் நடத்தி விட்டு கலைந்து சென்றனர். இது குறித்து நாம் தமிழர் கட்சியினர் 13 பேர் மீது ஏற்காடு போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

கடந்த 2 நாட்களுக்கு முன் திராவிடர் விடுதலை கழகத்தை சார்ந்த 100 பேர் எட்டாவது கொண்டை ஊசி வளைவில் ஒன்று திரண்டனர். பின்னர் நாம் தமிழர் கட்சியினர் ஒட்டியிருந்த பிளக்ஸ் இன் மீது ஈ.வெ.ரா., வளைவு என்ற பிளக்ஸை ஒட்டினர். நாம் தமிழர் கட்சி யினர் மீது நடவடிக்கை கோரி போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில் இன்று இரவு நெடுஞ்சாலை துறையினர் திராவிடர் விடுதலை கழகத்தினர் ஒட்டிய ஈ.வெ.ரா., வளைவு என்ற பிளக்ஸ் பேனரை அகற்றிவிட்டு அந்த வளைவில் மீண்டும் தகடூர் அதியமான் வளைவு என்று எழுதினர். அந்த வளைவில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் தெற்கு பகுதி சார்பில் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி அன்னதானம் வழங்கப்பட்டது





தாம்பரம், டிச.29-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட தாம்பரம் தெற்கு பகுதி சார்பில் பகுதி செயலாளர் கேட்.எம். தர்மா தலைமையில் 63வது மேற்கு மற்றும் கிழக்கு வட்ட செயலாளர் குமார், தேன் என்கின்ற லட்சுமணன், 61வது வட்டச் செயலாளர் ராஜ் மகேந்திரன் , 62வது வட்டச் செயலாளர் இளங்கோ, 48வது வட்ட செயலாளர் அண்ணாமலை, 46வது வட்டச் செயலாளர் காந்தி, 64வது வட்ட செயலாளர் கன்னியப்பன் ஆகியோர் ஏற்பாட்டில் 2ஆம் ஆண்டு விஜயகாந்த் நினைவு நாளை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு படத்திற்கு மலர் தூது மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனேகை முருகேசன் அவர்களின் ஆலோசனைப்படி நிகழ்ச்சி நடைபெற்றதுஇதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட துணைச் செயலாளரும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான மா.செழியன் கலந்து கொண்டு விஜயகாந்த் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் அதனை தொடர்ந்து ஏழு வார்டுகளில் கழக கொடி ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கி அன்னதானம் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் கிழக்கு பகுதி செயலாளர் காந்தி சேகர், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் அரிகிருஷ்ணன், மாவட்ட மகளிர் அணி மாவட்ட செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, மாவட்ட வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் சுஜாதா நந்தினி, தாம்பரம் தெற்கு பகுதி துணைச் செயலாளர்கள் ஏழுமலை, தமிழரசி, ஐ.கே.தர்மா, மாவட்ட பிரதிநிதி பாலமுருகன், கேப்டன் மன்ற செயலாளர் நெரும்பூர் ராஜேந்திரன், கிழக்குப் பகுதி இளைஞர் அணி செயலாளர் சங்கர், இளைஞரணி துணைச் செயலாளர் சந்தோஷ் குமார், கிழக்கு மற்றும் மேற்கு வட்ட நிர்வாகிகள் எஸ்.முருகன், ஏ.ஏழுமலை, சரிதா, விஜயன், ரகு மற்றும் தேமுதிக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# சென்னை மெரினா சாலையில் ஏஐ தொழில்நுட்பத்துடன் சிசிடிவி கேமரா

சென்னை, டிச.29-

வாகன விதிமீறலைக் கண்காணிக்கவும் பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவும் மெரினா காமராஜர் சாலையில் ‘ஏஐ’ தொழில்நுட்பத்துடன் இயங்கக்கூடிய நவீன சிசிடிவி கேமராக்கள் கூடுதலாக பொருத்தப்பட்டுள்ளன.



சென்னையில் போக்குவரத்து விதிமீறல்களைத் தடுக்க போக்குவரத்து போலீஸார் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக அதிவேகமாக வாகனம் ஓட்டுபவர்கள், ஒரே இருசக்கர வாகனத்தில் 3 அல்லது அதற்கு மேல் செல்வோர், ஹெல்மெட் அணியாமல் இருசக்கர வாகனங்களை ஓட்டுபவர்கள், சீட்பெல்ட் அணியாமல் கார் ஓட்டிச் செல்வோர் என போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு போக்குவரத்து போலீஸார் சாலையோரம் நின்று அபராதம் விதிக்கின்றனர்.

மேலும் ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி, அதில் பதிவாகும் காட்சிகளை காவல் ஆணையர் அலுவலக கட்டுப்பாட்டு அறையில் இருந்தவாறும் கண்காணித்து அபராதம் விதிக்கின்றனர்.

இந்நிலையில், தற்போது கூடுதலாக மெரினா காமராஜர் சாலையில் விவேகானந்தர் இல்லம் அருகிலும், கண்ணகி சிலை அருகிலும் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்துடன் இயங்கும் அதிநவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த கேமராக்களில் பதிவாகும் காட்சிகள் அனைத்தும் காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்தவாறு போக்குவரத்து போலீஸாரால் கண்காணிக்க முடியும். போக்குவரத்து விதிமீறல்கள் மட்டுமல்லாமல் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் இந்த நவீன கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெரினா கடற்கரை, காம ராஜர் சாலையில் முதல்வர், நீதிபதிகள் மற்றும் அமைச்சர் கள், உயர் அதிகாரிகள் உட்பட பல்வேறு முக்கிய பிரமுகர்களின் வாகனங்கள் சென்று வருகின் றன. மேலும்,கடற்கரையை ரசிக்க பொதுமக்களும் அதிக அளவில் திரள்கின்றனர்.

எனவே, அனைத்து தரப்பினருக் கும் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் போலீ ஸார் ஈடுபட்டுள்ளனர். இந்நிலை யில், தற்போது பொருத்தப்பட் போலீஸாருக்கு உதவியாக இருக்கும் என காவல் அதிகாரி கள் தெரிவித்தனர். டுள்ள அதிநவீன கேமராக்கள் போலீஸாருக்கு உதவியாக இருக்கும் என காவல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# “இறந்தவர்களை வைத்துதான் திமுக ஆட்சிக்கு வந்தது” நயினார் நாகேந்திரன்

திண்டுக்கல், டிச.29-

“2002ல் இறந்தவர்கள் எல்லாம் வாக்காளர் பட்டியலில் உயிருடன் இருந்துள்ளனர். இறந்தவர்களை வைத்து தான் திமுக ஆட்சிக்கு வந்துள்ளது” என்று தமிழக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டினார்.



‘தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம்’ என்ற தலைப்பில் பாஜக சார்பில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் இரவு நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் அக்கட்சியின் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியதாவது: திமுக ஆட்சியில் அமைச்சர் ஐ.பெரியசாமி தொகுதியான திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூரில் உள்ள நீர் நிலைகளில் மணல் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் அர.சக்கரபாணி தொகுதியான ஒட்டன்சத்திரத்தில் ரூ.100 கோடிக்கு நில அபகரிப்பு நடந்துள்ளது.

குறிப்பாக, திண்டுக்கல் மாவட்டத்தில் பள்ளிகளுக்கு அருகிலேயே கஞ்சா, தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை நடக்கிறது. 70 பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லை. ஆசிரியர்களின் கால்களை மாணவர்கள் பிடித்துவிடும் அவல நிலை உள்ளது. பக்தியே இல்லாதவர்கள் பழநியில் முருகன் மாநாடு நடத்தினார்கள். ஆனால், மதுரையில் இந்து முன்னணி சார்பில் நடந்த முருகன் மாநாட்டில் உலகம் முழுவதும் இருந்து முருக பக்தர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலை என்று சொல்பவர்கள் சீக்கிரமே வீட்டுக்கு அனுப்பப்பட உள்ளனர். திமுக ஆட்சியில் நீதிமன்ற உத்தரவை மதிப்பதில்லை. திருப்பரங்குன்றம் மலையில் தீபத்தூணில் தீபம் ஏற்ற உத்தரவிட்ட நீதிபதியையே திமுக கூட்டணி கட்சியினர் விமர்சனம் செய்கின்றனர். எங்கு தவறு நடந்தாலும் இரும்புக்கரம் கொண்டு அடக்குவேன் என்று சொன்ன முதல்வரின் இரும்பு கை துருப்பிடித்து விட்டது.

தமிழக சிறையில் 72 மரணங்கள் நடந்துள்ளது. நாளொன்றுக்கு 6 கொலைகள் வீதம் தற்போது வரை 7500 கொலைகள் நடந்துள்ளன. இனியும் திமுக ஆட்சி தொடர்ந்தால் நாடு தாங்காது. திமுக கூட்டணியில் இருக்கும் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் அதிகாரம் கேட்பதாக தகவல் வருகிறது. பொங்கல் முடிந்ததும் தேசிய ஜனநாயக கூட்டணி பலம் பெறும்.

தமிழகத்தில் சிறப்பு வாக்காளர் திருத்த முகாம் மூலம் 97 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். 2002 ல் இறந்தவர்கள் எல்லாம் வாக்காளர் பட்டியலில் உயிருடன் இருந்துள்ளனர். இறந்தவர்களை வைத்து தான் திமுக ஆட்சிக்கு வந்துள்ளது. தமிழகத்தில் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு திட்டத்திலும் மத்திய அரசின் பங்கு 60 சதவீதம் இருக்கிறது. ஆனால், திமுக அரசு அனைத்து திட்டங்களிலும் ஸ்டிக்கர் ஒட்டுவதையே குறிக்கோளாக வைத்துள்ளது.

தமிழகத்திற்கு மட்டும் 14 லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்களை பிரதமர் மோடி கொடுத்துள்ளார். தமிழகத்துக்கு 11 அரசு மருத்துவ கல்லூரிகளை கொடுத்திருக்கிறார். திமுக ஆட்சியில் ஒரு மருத்துவ கல்லூரியாவது கொண்டு வர முடிந்ததா? . வரும் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிப் பெறும். ஆளுநர் மாளிகையில் எடப்பாடி பழனிசாமி முதல்வராக பதவியேற்கும் நாள் வரும். இவ்வாறு அவர் பேசினார்.

பிரச்சாரத்தின் போது, தமிழக பாஜக பொதுச் செயலாளர் பேராசிரியர் ராம.சீனிவாசன், தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன், அதிமுக முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் ஆகியோர் உடனிருந்தனர்.




# சாதியவாதம், மதவாதத்துக்கு எதிராக நாடு முழுவதும் போராடுவோம்: தீண்டாமை ஒழிப்பு முன்னணி உறுதி

புதுச்சேரி, டிச.29-

சாதியவாதம், மதவாதத்துக்கு எதிராக தீண்டாமை ஒழிப்பு முன்னணி தொடர்ந்து நாடு முழுவதும் போராடும் என்று கேரள எம்.பி ராதாகிருஷ்ணன் பேசினார்.

புதுச்சேரியில் தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் 5வது மாநில மாநாடு இன்று தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் அகில இந்திய துணைத் தலைவர் கே. சாமுவேல்ராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாநாட்டை துவக்கி வைத்து பேசுகையில், "நவீன காலகட்டத்தில் வாழ்ந்து வருகின்றோம். இந்த நூற்றாண்டிலும் சாதிய கொடுமைகள் தொடர்வது வருத்தம் அளிக்கிறது.

உயர்ந்த படிப்புகளை படித்துள்ள ஐஐடி போன்ற ஆராய்ச்சி நிறுவன இயக்குனர்கள் பிற்போக்குத்தனமான கருத்துகளை மாணவர்களிடம் கூறி வருகின்றனர். இந்திய சமூகம் எதை நோக்கி போகிறது என்று ஐயம் நம்மைப் போன்றவர்கள் மத்தியில் எழுகிறது. ஆட்சி அதிகாரத்துக்காக தலித் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி ஆட்சி அதிகாரத்திற்கு வருகின்ற நிலை உள்ளது. எனவே இந்துத்துவா அமைப்பின் சதியை முறியடிக்க நாம் அனைத்து பகுதி மக்களையும் ஒருங்கிணைக்க வேண்டிய அவசியம் உள்ளது” என்றார்.

தீண்டாமை ஒழிப்பு முன்னணி அகில இந்திய தலைவரும், கேரள எம்.பியுமான ராதாகிருஷ்ணன், மாநாட்டை நிறைவு செய்து பேசுகையில், “1957 ஆம் ஆண்டு கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இளம்எஸ் அரசு ஒடுக்கப்பட்ட மக்களுக்காக செயல்திட்டங்களை அமல்படுத்தியது. நில உச்சவரம்பு சட்டம் அமலாக்கியது. ஏழை விவசாயிகளுக்கான நிலத்தை அந்த அரசு உறுதி செய்தது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கல்வியை உறுதி செய்தது. ஏராளமான சமூகநல திட்டங்களை இளம்எஸ் அரசு செய்து காட்டியது.

கேரளம் இன்றைக்கும் வளர்ச்சி நோக்கி செல்கிறது என்றால் மார்க்சிஸ்ட்கள் சாதியவாதத்தையும் மதவாதத்தையும் எதிர்த்து மிகப் பெரிய இயக்கங்களை நடத்தி வந்துள்ளனர். எனவே தீண்டாமை ஒழிப்பு முன்னணி அத்தகைய போராட்டங்களை நாடு முழுவதும் எடுத்துச் செல்லும்” என்றார். முன்னதாக, சாதி மறுப்பு திருமணம் செய்த தம்பதிகளுக்கு நினைவு பரிசு தரப்பட்டது.




# பெட்ரோல் பங்க் எண்ணிக்கை 1 லட்சத்தை தாண்டியது: உலகளவில் இந்தியா 3வது இடத்தைப் பிடித்தது

புதுடெல்லி, டிச.29-

உலகளவில் அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக பெட்ரோல் பங்க்குகள் அதிகம் உள்ள மூன்றாவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

இந்தியாவில் சில்லரை விற்பனை பெட்ரோல் பங்க்குகள் நெட்வொர்க் கடந்த 10 ஆண்டுகளில் 2 மடங்காக அதிகரித்துள்ளது தெரிய வந்துள்ளது. தற்போது ஒரு லட்சம் பெட்ரோல் பங்க்குகள் என்ற எண்ணிக்கை இந்தியா தாண்டி உள்ளது.

இதன் மூலம் அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக உலகளவில் பெட்ரோல் பங்க்குகள் அதிகம் உள்ள 3வது நாடு என்ற சாதனையை இந்தியா படைத்துள்ளது.

அமெரிக்காவில் ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட பெட்ரோல் பங்க்குகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. அதேபோல் சீனாவில் ஒரு லட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெட்ரோல் பங்க்குகள் உள்ளன. இந்தியாவில் தற்போது ஒரு லட்சத்து 266 பெட்ரோல் பங்க்குகள் உள்ளன.

இதுகுறித்து இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் முன்னாள் தலைவர் பி.அசோக் கூறும்போது, ‘‘கிராமப்புறங்களிலும் நிறைய பெட்ரோல் பங்க்குகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அத்துடன், போட்டிகள் அதிகரிப்பால் நுகர்வோர் சேவையும் மேம்பட்டுள்ளது’’ என்றார்.

இந்தியாவில் உள்ள மொத்த பெட்ரோல் பங்க்குகளில், 29 சதவீதம் கிராமப்புறங்களில் உள்ளன. இந்த எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் 22 சதவீதமாக இருந்தது. பெட்ரோல் பங்க் துறையில் தனியார் பங்கு 10 சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது. ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் நாடு முழுவதும் 2,100 பங்க்குகளை இயக்குகிறது. நயாரா எனர்ஜி 6,900 பங்க்குகளை நிர்வகிக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் பெட்ரோல் நுகர்வு 110 சதவீதம் அதிகரித்துள்ளது. டீசலின் நுகர்வு 32 சதவீதம் உயர்ந்துள்ளது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.






# இலங்கை சிறையில் இருந்து 61 மீனவர்களை விடுவிக்க மத்திய அரசின் நடவடிக்கை தேவை: முதல்வர் ஸ்டாலின்

சென்னை, டிச.29-

இலங்கை காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்கவும் உரிய தூதரக வழிகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் முதல்வர் கூறியிருப்பதாவது: ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 27.12.2025 அன்று மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மீனவர்களை அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்த மற்றொரு சம்பவத்தை வெளியுறவுத் துறை அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

தமிழக மீனவர்களும் அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கை அதிகாரிகளால் சிறை பிடிக்கப்படுவது தங்கு தடையின்றி தொடர்ந்து நடைபெற்று வருவது கவலையளிக்கிறது. இக்கைது நடவடிக்கைகள் நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 248 மீன்பிடிப் படகுகளும், 61 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் காவலில் உள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே எதிர்காலத்தில் இது போன்ற கைது சம்பவங்கள் நிகழாமல் தடுக்கவும், இலங்கை காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்கவும் உரிய தூதரக வழிகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்துகிறேன். இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சீனாவில் 2 விநாடிகளில் 700 கி.மீ. வேகம் எடுத்த ரயில்: புதிய உலக சாதனை

பெய்ஜிங், டிச.29-

சீனாவின் தேசிய பாதுகாப்பு தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் ‘மேக்னெடிக் லெவிடேஷன்' எனப்படும் காந்தப்புல தொழில்நுட்பத்தின் அடிப்படையில் 1 டன் எடை கொண்ட ரயிலை இயக்கி சோதனை நடத்தினர். இதில் வெறும் 2 விநாடிகளில் அந்த ரயில் மணிக்கு 700 கி.மீ. வேகத்தை எட்டி உலக சாதனை படைத்தது.

400 மீட்டர் (1,310 அடி) நீளமுள்ள காந்தப்புல ரயில் பாதையில் இந்த சோதனை நடத்தப்பட்டது, மேலும் 700 கி.மீ. வேகத்தை அடைந்த பிறகு ரயில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டது. இதன் மூலம் இதுவரை உருவாக்கப்பட்ட காந்தப்புல ரயில்களில் அதிக வேகம் கொண்ட ரயில் என்ற பெருமையை இது பெற்றது.


இந்த ரயில், தண்டவாளங்களைத் தொடாமல், அதன் மேலே காந்த விசையில் செல்லக் கூடியது. இதன் முடுக்கம் மிகவும் சக்தி வாய்ந்தது. ஒரு ராக்கெட்டை ஏவும் அளவு சக்தி வாய்ந்தது. இந்த வேகத்தில் நீண்ட தொலைவில் உள்ள நகரங்களை சில நிமிடங்களில் இந்த ரயில்கள் மூலம் நாம் இணைக்க முடியும்.

இந்த சாதனையை படைத்த ஆராய்ச்சியாளர்கள் குழு கடந்த 10 ஆண்டுகளாக இந்தத் திட்டத்தில் பணியாற்றி வருகிறது

# “எங்கள் எதிரி இந்தியும் திராவிடமும்தான்” சீமான் திட்டவட்டம்

மதுரை, டிச.29-

எங்களுக்கு கோட்பாட்டு எதிரி இந்தியும், திராவிடமும் தான் என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.



மதுரையில் நடந்த சவுராஷ்டிரா அமைப்பு மாநாட்டில் பங்கேற்க சென்னையிலிருந்து விமான மூலம் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று மதுரை வந்தார். விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: “நீண்ட காலமாக கோரிக்கை வைத்து ஆசிரியர்கள் போராடுகின்றனர். 14,000 மேற்பட்ட ஆசிரியர் பணிக்கு தேர்ச்சி பெற்று காத்திருக்கின்றனர். ஆட்சியே முடிந்துவிட்டது.

மறுபடியும் அந்த கோரிக்கையை வைத்து போராடுகின்றனர். ஆசிரியர் உள்ளிட்ட அனைவரையும் தெருவில் நிறுத்திவிட்டு நல்லாட்சி என்றால் எப்படி. உதவி பேராசிரியர் தேர்வில் முதல்வர் காலை உணவுத் திட்ட கேள்விக்கு தாக்கம் இல்லை என சொன்னால் என்னை தேர்ச்சி பெறவிட மாட்டீர்கள். மாற்றி எழுதினால் என்னைத் தேர்வு செய்து வேலைக்கு சேர்ப்பீர்கள்.

பொங்கல் பரிசு தொகைக்கு உங்கள் சொத்தை விற்று கொடுக்கிறீர்களா? ரூ. 10 லட்சம் கோடி கடனுக்கு விளக்கம் சொல்ல முடியுமா? கடனை வாங்கி கொடுத்துவிடுவீர்கள். ஒருவரின் தலையையில் ஒரு லட்சம் ரூபாய் கடன் உள்ளது. பொங்கல் கொண்டாட முடியவில்லை. அந்தளவுக்கு ஏழ்மை நிலையில் எங்களை வைத்திருக்கிறீர்கள். பொங்கலுக்கு பரிசு என்பது ஓட்டை பறிக்கும் வேலை. நாட்டை காப்பாற்ற அல்ல.

விளை நிலங்களை பறித்து தொழிற்சாலை தொடங்கினால் சாப்பாடு எங்கிருந்து வரும். சிப்காட் தொழிற்சாலைக்குள் ஊடகம் செல்ல முடியுமா? 26 கிலோ மீட்டர் தண்ணீர் கெட்டு விட்டதாக சொல்கின்றனர். அரசிடம் தனியார் முதலாளி கடன் கேட்கலாம். அரசு தனியார் முதலாளியிடம் வண்டி கேட்கிறது.

தமிழ்நாடு போக்குவரத்தில் மட்டும் இல்லை. கருணாநிதி இருந்தபோது, சேரன், சோழன், பாண்டியன் என இருந்தது. அதையெல்லாம் தூக்கிவிட்டு, தமிழ்நாட்டையும் தூக்கிவிட்டு அரசு பேருந்து என உள்ளது. அரசு பள்ளி என்று தான் இருக்கிறது. தமிழ்நாடு அரசு பள்ளி, பேருந்து, விடுதி என்று இல்லை. டாஸ்மாக்கில் மட்டும் தமிழ்நாடு என உள்ளது. தமிழ்நாடு என்று இருப்பது உங்களுக்கு அவமானமாக உள்ளது. வேண்டுமென்றால் திராவிட அரசு என போட்டுக் கொள்ளுங்கள்.

நான்காம் தமிழ் சங்கம் நடத்திய பாண்டித்துரைதேவரின் பெயரை மதுரையிலுள்ள நூலகத்திற்கு ஏன் வைக்கவில்லை. ஜல்லிக்கட்டுக்கும் கருணாநிதிக்கும் என்ன சம்பந்தம்? காளை வளர்த்தாரா, அடக்கி காயம் பட்டாரா? அங்கு மைதானம் கட்டியதற்கு கலைஞர் பெயர் வைத்திருகின்றனர். மூக்கையாதேவர் பெயரை வைத்திருக்கக் கூடாதா? எங்கள் அடையாளங்களை நிறுவி உங்கள் அடையாளத்தை அழிப்பதில் என்ன தவறு.

வாழ்க்கையில் ஜெயிப்பதற்கு நல்ல எதிரி வேண்டும். எல்லோரையும் எதிர்க்க முடியாது என விஜய் பேசி இருப்பது சரிதான். அவர் ஒரு எதிரியை தீர்மானித்து வைத்திருக்கிறார். எங்களுக்கு கோட்பாட்டு எதிரி இந்தியும், திராவிடமும் தான். விஜயின் எதிரியை அவரிடமே கேளுங்கள். 8 கோடி மக்களுடன் கூட்டணி வைத்து தேர்தலை சந்திக்கிறேன். எனக்கு எந்த கட்சி கூட்டணியும் தேவையில்லை” இவ்வாறு சீமான் கூறினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161